# The Bible Standard

(Extra - Edition)



உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும். சங். 43:3

**"LIFT UP A STANDARD
FOR THE PEOPLE"
Isaiah 62 : 10**

**Translated from the Booklet**

பொருளடக்கம்

# ஜீவனும் அழியாமையும்

## LIFE AND IMMORTALITY

"கிறிஸ்து .............. ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்."

(௨ தீமோ. 1 : 10)

**BS Tamil Version - 13**

# ஜீவனும் அழியாமையும்

## Life and Immortality

"**மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் காத்திருக்கிறேன்**" – யோபு 14 : 14.

மரணத்துடன் மானிட ஜீவியமே முடிவடைந்து விடுகிறதில்லை என்ற நம்பிக்கை மனிதர்களுக்குள் சாதாரண மாய் இருந்து வருகிறது. இப்பொழுது தொடங்கியிருக்கும் ஜீவியமானது, எவ்விதமாகவோ, எங்கேயோ தொடர்ந்துபோகும் என்பது விவரிக்க முடியாத நம்பிக்கையாக இருந்துவருகிறது. சிலருக்கு இவ்வித நம்பிக்கை பயத்தைக் கொடுக்கிறது. சந்தோஷம் நிறைந்த பிற்கால ஜீவியத்தை அனுபவிக்க தாங்கள் அபாத்திரவான்கள் என அறிந்து, நிர்ப்பாக்கியம் நிறைந்த பிற்கால ஜீவியத்தை அடைய அநேகர் பயப்படுகிறார்கள்; ஆனால் தங்களைப் பற்றியும் மற்றவர்களைப்பற்றியும் எவ்வளவுக்கதிகமாய்ப் பயங்கொள்ளுகிறார்களோ, அவ்வளவுக் கதிகமாய் அதில் நம்பிக்கையும் கொள்ளுகிறார்கள்.

பிற்கால ஜீவியத்தைப்பற்றியுள்ள விவரிக்க முடியாத இந்த நம்பிக்கையும், அதினால் ஏற்படும் பயமும், ஆதாம் பாவத்திலும் மரணத்திலும் விழுந்த பின்பு, தேவன் சர்ப்பத்தைப் பார்த்து, ஸ்திரீயின் வித்து அதின் தலையைக் கடைசியாக நசுக்கிப்போடுமென்று அதின் மேல் விதித்த ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து உண்டாகியிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. இதனால் ஆதாமின் வம்சத்தில் ஒரு பாகத்தார் சாத்தானிட மிருந்தும், அவன் மூலமாய் உண்டான பாவம், மரணம், முதலியவற்றினின்றும் விடுதலையடைந்து, கடைசியாய் ஜெயம் பெறுவார்கள் என்று கருதுவதற்கு இடமுண்டாயிற்று. தேவனும், நோவாவின் மூலமாகவும், "**இதோ ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார்**" என்று தீர்க்கதரிசனம் உரைத்த ஏனோக்கின் மூலமாகவும், கருகலான வகையாய் இவ்விஷயத்தைப் பற்றிப் பேசி, அப்பேர்ப்பட்ட நம்பிக்கையைத் திடப்படுத்தினார்.

### ஆபிரகாமுக்கு அளித்த வாக்குத்தத்தம் நம்பிக்கையை அதிகப்படுத்தினது

மரணத்தினின்று ஓர் இரட்சிப்பை மனுக்குலம் முழுவதுக்கும் தேவன் ஏற்ற காலத்தில் கட்டளையிடுவாரென்று சுவிசேஷமாகிய நற்செய்தி முதலாவதாக தேவனால் ஆபிரகா முக்குத் தெளிவாக அறிவிக்கப்பட்டது. "**உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும்**" என்று சொல்லி சுவிசேஷம் ஆபிரகாமுக்கு முன்னறிவிக்கப்பட்டதென்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். உயிர்த்தெழுதலைப்பற்றி யூதர்களுக்குள் உண்டாயிருந்த நம்பிக்கைக்கு இதுவே மூலா தாரமாயிருந்தது; ஏனென்றால் பூமியிலுள்ள வம்சங்களில் அநேகம் மரித்தும் மரித்துக்கொண்டுமிருந்தபடியால், எல்லா ருக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசிர்வாதம் உயிர்த் தெழுதலின் மூலமாய்க் கிடைக்கும் என்பது (பிற்கால ஜீவியம் உண்டென்பது) திட்டமாயிற்று. மேலும் அநேக நூற்றாண்டு களுக்குப்பின், பாபிலோனியச் சிறையிருப்புக் காலத்தில் இஸ்ரவேலர் பல ஜாதிகளுக்குள்ளும் சிதறடிக்கப்பட்டுப் போனபொழுது, தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், அவைகளின் மேலுள்ள தங்கள் நம்பிக்கைகளையும் அவர்கள் விட்டுவிடவில்லை. அவர்கள் எங்கெங்கே போனார்களோ அந்தந்த இடங்களில் எல்லாம் அவைகள் அவர்களில் சிறந்து விளங்கின.

யூதர்களுடைய கோட்பாடுகளுக்கு இடங்கொடுத்ததி னாலோ, அல்லது மனுஷனுடைய இயல்பான சுபாவமாயிருக் கிறதினாலோ, அல்லது இவ்விரண்டு காரணங்கள் பற்றியோ, எவ்விதமாகவோ, பிற்கால ஜீவன் உண்டென்று உலக முழுவதும் நம்புகிறது என்பது நிச்சயமான காரியமாக இருக்கிறது; கொஞ்சங்குறைய எல்லாருமே அது நித்தியமானதென்றும் நம்புகிறார்கள். ஆனால் அவ்வித நம்பிக்கைகள் ஒருவர் கொண்டிருக்கும் கோட்பாட்டுக்கு நிரூபணமாகாது; மேலும் யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட பழைய ஏற்பாட்டிலுள்ள வாக்குத்தத்தங்களை மாத்திரம் பிரத்தியேகமாய்க் கவனிப்போ மானால், அவைகள் எளிதில் அறிந்து கொள்ளப்படக்கூடி யவைகளாக இருக்கவில்லை; அவைகள் வரையறை இல்லாத வைகளாய் இருந்தன. ஆகவே அவைகள் தெளிவும் திட்டமுமான விசுவாசத்துக்கு மூலாதாரமாயிருக்க முடியாமற்போனதுமன்றி, நித்திய ஜீவனைப்பற்றி திட்டமான வேத சாஸ்திர அறிவை உண்டுபண்ணவும் முடியாமற்போயிற்று.

### புதிய ஏற்பாட்டின் உறுதிமொழிகள்

இந்த முக்கியமான விஷயத்தைப்பற்றி, அதாவது நித்திய ஜீவனைப் பற்றி நமது கர்த்தரும், அவரது அப்போஸ்தலரும் புதிய ஏற்பாட்டில் சொல்லியிருக்கிற தெளிவும், திட்டமுமான விவரங்களை நாம் அறிந்து கொண்ட பின்பே, திட்டமில்லாத நமது நம்பிக்கைகளுக்குப் பதிலாகத் திட்டமும் நிச்சயமுமான தீர்மானங்களை அடையக் கூடியவர்களாகிறோம். பிற்கால ஜீவியம் எல்லாருக்கும் கிடைக்கும்படி ஏற்பாடாகியிருக் கிறதென்று அவர்கள் சொல்லிய விஷயங்களிலிருந்து திட்டமும் தீர்க்கமுமாய் நாம் அறிகிறதோடுகூட, அவ்விஷயத்தைப் பற்றியுள்ள தத்துவ ஞானமும் (மெய்யறிவும்), அதை எவ்விதம் பெற்றுக்கொண்டு நமக்குரியதாக்கிக்கொள்ள வேண்டுமென் பதும், வேறெங்கும் சொல்லியிராத வண்ணமாய், புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கின்றன என்றும் நாம் அறிகிறோம்.

இவ்விஷயங்களை அநேகர் கவனியாதபடியால், "**விசுவாசத்தில் பெல வீனமுள்ளவர்களாயிருக்கிறார்கள்**". இந்தத் தத்துவ ஞானம் என்னவென்று நாம் ஆராய்ந்து பார்த்து. ஞானமும் வல்லமையுமுள்ள நமது சிருஷ்டிகர் ஏற்படுத்தியி ருக்கும் ஒழுங்குப்படி, பிற்கால ஜீவனாகிய நித்திய ஜீவன்

COURTESY BY :
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

மனுக்குலத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் கிடைக்ககூடியதாய் இருக்கிறதென்று முன் ஒருக்காலும் அறியாத பிரகாரமாய் நாம் தீர அறிந்து உறுதியடைவோமாக.

நித்திய ஜீவனைப்பற்றி புதிய ஏற்பாட்டின் மூலமாய் உண்டாகும் உறுதிப்பாட்டை அஸ்திபாரமாகக்கொண்டு, நாம் ஆச்சரியப்படத்தக்க விதமாய்க் கண்டுபிடித்துக்கொள்வது யாதெனில்:- ''நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையை நமக்குக் கொடுப்பதற்கு நம்மிலும் நமக்குரியவைகளிலும் யாதொன்று மில்லையென்று எல்லாவற்றிற்கும் முதலாவதாக அது நமக்கு எச்சரித்துப் புத்தி சொல்லுகிறது. நமது மனுக்குலத்திற்குரிய ஜீவனை நமது ஆதித் தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியா மையினால் நாம் இழந்துபோனோம். அவன் என்றைக்கும் உயிரோடிருக்கத் தகுதியுள்ளவனாய் பூரணனாகச் சிருஷ்டிக்கப் பட்ட போதிலும், அவன் செய்த பாவமானது பாவத்தின் சம்பள மாகிய மரணத்தை அவன் மேல் பலிக்கச் செய்ததுமன்றி, அவனுக்குப் பிறக்கும் பிள்ளைகள், செத்துக்கொண்டேபோகும் சத்துவங்களைச் சுதந்தரித்துக்கொண்டு, சாகும் நிலைமையில் பிறக்கவும் செய்து விட்டது'' என்பதே. தேவனைப்போலவே தேவனுடைய பிரமாணமும் பரிபூரணமானது; அவருடைய சிருஷ்டியாகிய ஆதாமும் பாவஞ்செய்யுமுன் அப்படியே பரி பூரணனாக இருந்தான்; ஏனென்றால் ''**அவருடைய கிரியை உத்தமமானது** (பரிபூரணமானது)'' என்று தேவனைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. அவருடைய பிரமாணத்தை ஆதாரமாகக் கொண்டு, பூரணமானதை மாத்திரம் அவர் ஒப்புக்கொண்டு , அபூரணமான எல்லாவற்றையும் அழிவாகிய தண்டனைக்குள் ளாக்கிப் போடுகிறார். ஆகவே பாவத்திலே பிறந்து ''துர்க் குணத்திலே உருவாக்கப்பட்ட'' ஆதாமின் சந்ததிக்கு , புதிய உடன்படிக்கைக்குரியதும், நற்செய்தியாகிய சுவிசேஷம் என்று அழைக்கப்படுவதுமாகிய நிபந்தனைகளினாலேயன்றி, வேறு எவ்விதத்தினாலும் நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கைக்கு இடமில்லை ; அந்த சுவிசேஷம் யாதெனில்:- ''மனுஷன் விழுந்து போன நிலைமையினின்று நீங்கி, மானிட பூரணத்தை யும், தேவ தயவையும், நித்திய ஜீவனையும் திரும்ப அடைந்து கொள்வதற்கான வழியானது, ஆதாமின் சந்ததியில் அதை (நித்திய ஜீவனை) தங்களுக்கு உரித்தாக்கிக் கொள்ளுகிற எல்லாருக்காகவும் கிறிஸ்துவின் மூலமாய் திறக்கப்பட்டிருக் கிறது'' என்பதே.

## கிறிஸ்து ஆதாமுக்காகவும், அவன் சந்ததிக்காகவும் மரித்தார்

தேவனோடு ஒப்புரவாகுதலையும், அவ்விதமாக நித்திய ஜீவனையும் அடையலாம் என்ற இப்புதிதான நம்பிக்கை கொள்வதற்கு மூலாதாரம். (1) ''கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார்'', (2) ''நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக அவர் மறு படியும் எழும்பினார்'' என்ற வாசகங்களில் அடங்கியிருக்கிறது; ஏனென்றால் ''**எல்லாரையும் மீட்கும் பொருளாக (பிரதிக்கிரை யமாக) தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த மனிஷனாகிய கிறிஸ்து இயேசுவாக**'' இயேசு வந்தார். ஆதாமும், அவன் பாவஞ்செய்த பொழுது அவனிலே இருந்ததும், அவன் மேல் விதிக்கப்பட்ட தண்டனையில் இயல்பாகவே பங்கடைந்ததுமான அவனுடைய சந்ததியும், ''**கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால்** (மரணத்தினால்) **மீட்கப்பட்டிருக்கிறார்கள்** (கிரையத்துக்குக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்)''. (1 பேது. 1 : 19) .

## தேவனுடைய நியமம் நிபந்தனைகளுக்குட்பட்டது

ஆனால் தேவனுடைய நியமம் எல்லாருக்கும் போது மான படி நிறைவானதாய் இருந்தபோதிலும், சில நிபந்த னைகளுக்கு உட்பட்டாலன்றி, எவருக்கும் அது பிரயோகப் படுத்தப்படக் கூடியதல்ல. அந்த நிபந்தனை என்னவென்றால், ''ஒவ்வொரு மனுஷனும் பாவத்தை விட்டு விலகி தேவனுக்கும் நீதிக்கும் (சத்தியத்துக்கும்) இசைவாக ஜீவிக்க முயலவேண்டும்'' என்பதே. ஆகையால்தான் ''நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாயுண்டான நித்திய ஜீவன், தேவனுடைய கிருபை வரம் (ஈவு)'' என்று நமக்குச் சொல்லப்படு கிறது. (ரோம. 6 : 23). பின்வரும் வேத வாக்கியங்களும் இவ்விஷயத்தை மிகத் தெளிவுபடுத்திக் காண்பிக்கின்றன:- ''**குமாரனை உடையவன் ஜீவனை** (தேவனுடைய ஈவாகிய ஜீவனையும், ஜீவனோடிருப்பதற்குரிய உரிமையையும், சிலாக்கியத்தையும்) **உடையவன்: ஆனால் குமாரன் இல்லாதவன்** (பூரணமான) **ஜீவனைக் காண்பதில்லை**'' (யோவா. 3 : 36: 1 யோவா. 5 : 12).

மீட்பரும் ஜீவனைக் கொடுக்கிறவராக நியமிக்கப் பட்டவருமான கிறிஸ்துவினிடமிருந்து அல்லாமல், வேறெவ் வகையாலும் ஒருவரும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியாது; விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்திக் காண்பித்து, அவ்விதமாய் ''நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும்'' சிலாக்கியத்தை அடைய நமக்கு வழிகாட்டுகிற சத்தியம் ''ஜீவ தண்ணீர்'' என்றும் ''ஜீவ அப்பம்'' என்றும் சொல்லப்படுகிறது.

## கீழ்ப்படிதலும் உண்மையுமுள்ளவர்களுக்கே நித்திய ஜீவன்

நித்திய ஜீவனையும், அது ஒரு ஈவாகக் கொடுக்கப் படுவதற்குரிய நிபந்தனைகளையும் பற்றிய அறிவை அடைந் ததும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி ஜீவித்து அதைத் தேடுகிறவர் களுக்கு மாத்திரம் அது (நித்திய ஜீவன்) கொடுக்கப்படும். அவர்கள் அதை ஒரு கிருபை வரமாகப் பெற்றுக்கொள்வார்கள். (ரோம. 6 : 23; கலா. 6 : 8). இந்த நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் கர்த்தருடைய ஆடுகளாகி, மேய்ப்பனுடைய சத்தமாகிய போதனைகளைப் பின்பற்ற வேண்டும். (யோவா. 10 : 26-28; 17 : 2, 3).

நித்திய ஜீவனாகிய ஈவைப் பெற்றுக்கொள்ளும்படி எவரும் கட்டாயப்படுத்தப்படமாட்டார்கள்; அதற்கு மாறாக, அதைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் எல்லாரும் அதை விருப்பமுடன் தேடிப் பற்றி கொள்ள வேண்டும். (1 தீமோ. 6 : 12, 19). ஆகையால் தேவன் இப்பொழுது நமக்குக் கொடுப்பது மெய்யான ஜீவனாயிராமல் அது ஓர் நம்பிக்கையாக மாத்திரம் இருக்கிறது. தேவன் நீதியுள்ளவரும், கிறிஸ்துவை உண்மையாய் வி சுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் எல்லாரையும் நீதிமான்களாக்கத்தக்கவருமாய் இருக்கத்தக்க தான ஓர் வழியை அவர் உண்டுபண்ணியிருக்கிறபடியால் ஏற்ற காலத்தில் நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கையையே தேவன் இப்பொழுது நமக்குக் கொடுக்கிறார்.

நாம் ஜீவனையடையும்படி தமது ஜீவனைப் பலியாகச் செலுத்தி , நமது கர்த்தராகிய இயேசு நம்மை தேவனுடைய கிருபையினால் கிரையத்துக்குக் கொண்டது மாத்திரமல்ல, அவர் நமது பிரதான ஆசாரியராகி, ''**அவருக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணருமானார்.**'' (எபி. 5 : 9). **நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்**''. - 1 யோவா. 2 : 25.

தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார். இப்பொழுது அதை விசுவாசத்தினாலும் நம்பிக்கையினாலும் பெற்றிருக்கிறோம்; கொஞ்சக் காலஞ்சென்று, நமது ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது உள்ளபடி மெய்யாய் அதை (பூரண நித்திய ஜீவனை) உயிர்த்தெழுதலில் பெற்றுக்கொள்வோம் : ''**அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்: தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.**'' 1 யோவா. 5 : 11 , 12.

ஆதாமுக்கும் அவனுடைய சந்ததி முழுவதுக்கும், நமது மீட்பர் மூலமாய்க் கிடைக்கும்படி, நமது சிருஷ்டிகர் ஏற்படுத்தியிருக்கும் இந்த நித்திய ஜீவன், உண்மையும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களுக்கு மாத்திரம் ஏற்பட்டதும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதுமாய் இருக்கிறது: அவர்களுக்கு, தற்காலத்தில் ஓர் நம்பிக்கையாக மாத்திரம் கொடுக்கப்படுகிற இந்த ஜீவன் உயிர்த்தெழுதலில் அவர்களுக்கு உள்ளபடியே மெய்யாய்க் கொடுக்கப்படும்.

## தேவ ஞானத்துக்கு உலக ஞானம் மிகுந்த வித்தியாசமானது

தேவனுடைய வசனத்தில் காட்டப்படுகிற தெளிவான வாக்குத்தத்தங்களுக்கும், இவ்வுலக ஞானங்களுக்கும், இவ் விஷயத்தைப்பற்றி மிகுந்த வித்தியாசம் உண்டு என்பதை நாம் அறியலாம். பிற்கால ஜீவன் உண்டென்று மனுஷன் நம்புகிறபடியாலும், சில விஷயங்களில் அவன் அதற்குப் பயப்படுகிறபடியாலும், அவன் பிற்காலத்தில் நித்திய ஜீவனை அடைய வேண்டியவன் ஆவானென்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் எந்த விஷயத்தையும் உண்மை என நம்புவதற்கு, நம்பிக்கைகளும் பயங்களும் நியாயமான காரணங்களாக மாட்டாது. மேலும் என்றென்றைக்கும் தொடர்ச்சியாய் உயிரோடிருக்கக்கூடிய ஏதோ மனுஷனுக்கு உள்ளிருக்கிறதென்று வழக்காடுவதற்கும் ஆதார நியாயமில்லை; மானிட சரீரத்தில் அப்படிப்பட்ட ஓர் உறுப்பு இருக்கிறதென்று ஒருவராலும் அறியப்படவுமில்லை, நிருபிக்கப்படவுமில்லை, நிலைநிறுத்தப் படவுமில்லை.

ஆனால் இந்த விஷயத்தைப் பற்றிய வேத உபதேசமோ அப்படிப்பட்ட ஆட்சேபங்களையும் சந்தேகங்களையும் உடையதல்ல; வேதபுத்தகம் நமது ஜீவியத்தை (நாம் உயிரோடிருப்பதை, நமது ஜீவனை) ''**தேவனுடைய கிருபை வரம்**'' என்று கூறுகிறது. அதாவது தேவனுடைய ஈவு என்றும், உரிமைப் படுத்த முடியாத நமக்குரிய சொந்த உடைமை அல்ல என்றும் எண்ணுவது முற்றிலும் நியாயமானதே, அன்றியும் இதர சமய ஞானிகளுடைய கோட்பாடு அடைந்திருக்கும் மகா மோசமான சங்கடத்தையும் சிக்கலையும் அது நீக்கிப்போடுகிறது; எனென்றால் மனுஷன் அழிந்து போக முடியாதென்றும், அவன் என்றென்றைக்கும் உயிரோடிருப்பான் என்றும், வேத புத்தகம் சொல்லுகிறபடி நித்திய ஜீவன் தேவனுடைய கிருபை வரம் அல்ல என்றும், அது ஒவ்வொரு மனுஷனிலும் இயல்பாகவே அமைந்துள்ள ஓர் இலட்சணமென்றும் இதர சமய ஞானிகள் சொல்லுபவை அளவுக்கு மிஞ்சிப் பேசுகிற, உண்மையற்ற வார்த்தைகளாகும்.

நித்தியமாய் உயிரோடிருப்பதைச் செவ்வையாய் உபயோகித்து, அதைத் தங்களுக்கு ஆசீர்வாதமாக்கிக் கொள்கிறவர்களுக்கு மாத்திரமல்ல, அதைச் செவ்வையாக உபயோகித்துக் கொள்ளாமல், தங்களுக்குச் சாபமாக உபயோகித்துக் கொள்கிறவர்களுக்கும் நித்திய ஜீவன் உண்டென்று இதர சமய ஞானம் கூறுகிறது.

## துன்மார்க்கர் அடைவது நித்திய அழிவே

வேத புத்தகமோ, அதற்கு மாறாக, ஜீவனைக் கொடுக்கிறவராகிய மீட்பரை விசுவாசித்து அவருக்குக் கீழ்படிகிறவர்களுக்கே, மதிப்புக்குள் அடங்காததும், விலையேறப் பெற்றதுமான தேவனுடைய கிருபை வரமாகிய நித்திய ஜீவன் கொடுக்கப்படுமென்று, நாம் முன்பே காட்டியிருக்கிறபடி, போதிக்கிறது; மற்றவர்களுக்கு அதை வழங்குவது அநியாயமாகவும் அவர்களுக்குக் கெடுதி உண்டுபண்ணுவதாகவும் இருக்கும். அவர்கள் அதை இப்பொழுது உடையவர்களாக இருக்கிறதுமில்லை, அவர்கள் அதை ஒரு பொழுதும் பெற்றுக்கொள்ளவும் முடியாது. ''**பாவத்தின் சம்பளம் மரணம்: தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலுண்டான நித்திய ஜீவன்**'', துன்மார்க்கர் , அதாவது சத்தியத்தை அறியும் தெளிவான அறிவை அடைந்தபின் அதற்குக் கீழ்ப்படியாமல் மனப்பூர்வமாய் எதிர்த்து நிற்கிறவர்களெல்லாரும் தேவனுடைய ஜனங்களின் நடுவிலிராதபடிக்கு இரண்டாம் மரணத்தினால் நிர்மூலமாக்கப்படுவார்கள் – அறுப்புண்டு போவார்கள். ''**இல்லாதவர்களைப்போல் ஆவார்கள்**''. ''**அவர்கள் முற்றிலும் அழிந்துபோவார்கள்**''. ''**நித்திய அழிவே**'' அவர்களுக்குரிய தண்டனையாயிருக்கும் – இந்த அழிவு சதாகாலமும் நிலைத்திருக்கும் – இதிலிருந்து யாதொரு விடுதலையும் கிடையாது. உயிர்த்தெழுதலும் கிடையாது. அவர்கள் நித்திய ஜீவனையும் அதற்குரிய சகல சிலாக்கிய பாக்கியங்களையும், ஆனந்த சந்தோஷங்களையும், ஆசீர்வாதங்களையும் இழந்துபோவார்கள் – தேவபக்தியும், உண்மையும் உள்ளவர்கள் பெற்றுக்கொள்ளும் எல்லாவற்றையும் துன்மார்க்கர் இழந்து போவார்கள். – சங். 37 : 9, 20; யோபு 10 : 19; 2 தெச. 1 : 10.

## அழியாமையின் விளக்கம்

நாம் இப்பொழுது ''நித்திய ஜீவன்'' என்ற வார்த்தையைப் பற்றி அறியும் சாதாரணமான அறிவிலிருந்தே அழியாமையின் மேலுள்ள நம்பிக்கையைப்பற்றி ஆராய்ந்து பார்த்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், நித்திய ஜீவனானது, புது உடன்படிக்கைக்குரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ஆதாமின் சந்ததியில் அதை ''ஏற்ற காலத்தில்'' பெற்றுக் கொள்ளும் யாவருக்கும் தேவன் அருளிச்செய்யும் கிருபை வரம் (ஈவு) என்றும் நாம் கண்டறிந்திருக்கிறோம்; என்றாலும், இவைகளைப்பற்றி இன்னும் கொஞ்சம் அதிகமாய் ஆராயவும், ஜனங்கள் சாதாரணமாய் எண்ணுகிறபடி ''**நித்திய ஜீவன்**'' என்பதும் ''**அழியாமை**'' என்பதும் ஒரே அர்த்தமுள்ள வார்த்தைகள் அல்ல என்று காண்பிக்கவும் நாம் விரும்புகிறோம். ''அழிக்கப்பட முடியாத'' (சாவாமையுள்ள) என்ற வார்த்தையானது நித்தியமாய் உயிரோடு இருப்பதற்குரிய சக்தியுடையதாய் இருப்பதைப் பார்க்கிலும் அதிகமான சக்தியுடையதாக இருப்பதைக் குறிக்கிறது. வேத வாக்கியங்களின்படி கோடிக் கணக்கானவர்கள் முடிவில் நித்திய ஜீவனைப் பெற்று அனுபவிக்கலாம் ;ஆனால் ''சிறு மந்தையாகிய'' ஓர் சிறு கூட்டத்தார் மாத்திரம் ''அழியாமை'' உள்ளவர்களாக்கப் படுகிறார்கள். அழியாமை தெய்வீக இனத்துக்குரிய (வகுப்பாருக்குரிய) இலட்சணம்; தெய்வீக இனத்துக்கேயன்றி வேறெவருக்கும் (மனுஷருக்கோ அல்லது தேவ தூதருக்கோ) அது உரியதல்ல . மேலும் கிறிஸ்துவும் ''அவருடைய மணவாட்டி''யாகிய ''சிறுமந்தையும்'' தெய்வீக இனத்துக்குப்

பங்குள்ளவர்களானபடியால், பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள மற்றெல்லாச் சிருஷ்டிகளுக்கும் அவர்கள் வேறுபட்டவர்களாக இருப்பார்கள். 2 பேது. 1 : 4.

அழியாமை – சாவாமை – அழிவின்மை – சாவின்மை – அழிக்கப்படக்கூடாத தன்மை – சாகக்கூடாததன்மை – இவை அனைத்தும் ஒரு பொருட் பன்மொழிகள்; சாவாமையுடையவர்களைச் (அழியாமையுடையவர்களைச்) சாகச்செய்ய (அழிவுக்குட்படுத்த) எவராலும் முடியாது. எந்தப் பிராணியாவது தான் உயிரோடிருப்பதற்கு எவ்விதத்திலேனும் மற்றொன்றின் மேல் சார்ந்திருக்குமானால், அது அழியாமையாகிய சாவாமையுடையதல்ல. அப்படிப்பட்டவைகள் அழிக்கப்படக் கூடியவைகளேயாகும்; அவை சாகுந்தன்மை உடையவைகளாகும். அழிக்கப்படக்கூடாத, அதாவது சாகக்கூடாத தன்மையானது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு முன், யேகோவாவாகிய தேவன் ஒருவருக்கே உண்டு; வேத புத்தகமும் அப்படியே சொல்லுகிறது :– ''**பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறார்**'' (யோவா. 5 : 26). அதாவது அவருடைய ஜீவியம் (அவர் உயிரோடிருப்பது) இன்னொன்றிலிருந்து உண்டானதுமில்லை , இன்னொன்றால் ஆதரிக்கப்படுகிறதுமில்லை; அவர் சாவாமையுள்ளவர்; அது அவருடைய இயல்பான சுபாவம் . ''**எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டவரும்**'', ''**தேவனுடைய தற்சொரூபமுமானவராகிய**'' நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இருக்கும் தற்கால பிற்கால நிலைமைக்கு 1 தீமோ. 6 : 16 பொருந்துகிறது. பரிசுத்த பவுல் இவ்வாக்கியத்தை எழுதின காலத்தில் பிதாவாகிய தேவன் (யேகோவா) நீங்கலாக (1 கொரி. 15 : 27 இயேசுவானவர் மாத்திரமே சாவாமையுள்ளவராக இருந்தார். அவ்விதமாக நாம் அறிந்துகொண்டாலும் இவ்வாக்கியத்தை (1 தீமோ. 6 : 16–ஐ) எழுதுகிற அப்போஸ்தலன்தானே 1 கொரி. 15 : 27–ல் சொல்லுகிற வியாக்கியானச் சட்டத்துக்கு இவ்வாக்கியம் (1 தீமோ. 6 : 16) உட்பட்டதாயிருக்கும்:– ''சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினவர் (பிதாவாகிய தேவன்) இதற்கு விலக்காயிருக்கிறாரென்பது வெளியரங்கமாயிருக்கிறது'' 1 கொரி. 15 : 27; ஒப்பிட்டுப் பார்க்கும் விஷயங்களிலெல்லாம் பிதாவானவர் நீங்கலாயிருக்கிறார்; ஏனெனில் அவரே சகல ஆசீர்வாதங்களும் புறப்பட்டு வருகிற ஊற்று. இந்த வேத வாக்கியங்களே நாம் எழுதும் விஷயத்துக்கு உறுதியான அத்தாட்சிகளாயிருப்பதால், மனிதர்களும், தேவ தூதர்களும், தேவனுடைய குமாரனும் (மனுஷனாகும் முன்பும், மாம்சமாகி நமக்குள்ளே வாசம்பண்ணின காலத்திலும்) அழியாமையுடையவர்களாய் இருக்கவில்லை (அழிக்கப்படக்கூடிய – சாகக்கூடியவர்களாகவே இருந்தார்கள்) என்பதைச் சந்தேகமற அறிந்துகொள்ளலாம்.

## அழிக்கப்படக்கூடியது என்றால் என்ன?

அழிவுள்ள (mortal) என்ற வார்த்தை சாகிற என்ற அர்த்தத்தைக்கொடாமல் ''சாகக்கூடிய'' (அதாவது தொடர்ச்சியாய் உயிரோடிருப்பதற்கு தேவன்மேல் சார்ந்திருந்து ஜீவனை உடையவனாயிருத்தல்) என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. உதாரணமாக:– தேவ தூதர்கள் அழியாமையுடையவர்களாயிராமல், சாகக்கூடியவர்களாயிருக்கிறபடியால், அவர்கள் தேவனுடைய ஞானமும், நீதியும்,அன்பும் நிறைந்த ஏற்பாட்டுக்கு விரோதமாய் எதிர்த்து நிற்பார்களானால், தேவனால் அழிக்கப்படக்கூடியவர்கள் ஆவார்கள். தேவனுடைய பராமரிப்புக்குள், அவருடைய செயலாலேயே, அவர்கள் உயிரோடே நடமாடி ஜீவிக்கிறார்கள். இப்படிப்பட்ட வெளிச்சத்தின் தூதனாயிருந்து, தேவனுக்கு விரோதமாய்ப்போன சாத்தானைப்பற்றி அவன் ஏற்ற காலத்தில் அழிக்கப்படுவான் என்று தெளிவாய்க் கூறப்படுகிறது. (எபி. 2 : 14) சாத்தான் அழிக்கப்படக்கூடியவன் – சாகக்கூடியவன் – என்று இது நிரூபிக்கிறதுமன்றி, பொதுவாக தேவ தூதர்களின் இனமே அழிக்கப்படகூடிய இனம் (அதின் சிருஷ்டிகரால் அழிக்கப்படக்கூடியவர்கள்) என்றும் நிரூபிக்கிறது. மனுஷனைப்பற்றியோவெனில், அவன் தேவ தூதர்களைப் பார்க்கிலும் சற்று சிறியவன் (சங். 8 : 5): ஆகையால் அவனும் அழிக்கப்படக்கூடியவனே (சாகக்கூடியவனே). ஆறாயிரம் வருஷங்களாக நமது மனுக்குலமானது செத்துக் கொண்டே வருகிறது என்ற சங்கதியாலும், கிறிஸ்துவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அழியாமையைத் தேடும்படியாகப் போதிக்கப்படுகிறார்கள் (ரோம. 2 : 7) என்ற சங்கதியாலும், மனுஷன் அழிக்கப்படக்கூடியவன் என்பது பெலமாய் நிரூபிக்கப்படுகிறது.

## ஆதாம் அழிக்கப்படக்கூடியவனாய் சிருஷ்டிக்கப்பட்டான்

ஆகையால் ஆதாம் பாவம் செய்த காரணத்தினால் அழிவுள்ளவன் (அழிக்கப்படக்கூடியவன் – சாகக்கூடியவன்) ஆகாமல், அவன் அழிக்கப்படக்கூடியவனாகவே சிருஷ்டிக்கப்பட்டான் – இயல்பாகவே அவன் மரண தண்டனைக்கு உட்படக் கூடியவனாய் இருந்தான். அவன் அழியாமை உடையவனாய் சிருஷ்டிக்கப்பட்டிருந்தால், அவனை ஒன்றும் (ஒருவரும்) அழித்திருக்க முடியாது; ஏனென்றால் அழியாமையானது, நாம் அறிந்துகொள்ளுகிறபடி, மரணத்துக்குட்படக்கூடாத நிலைமையாகும் – ஒருவராலும் அழிக்கப்படக்கூடாத நிலைமை, அதாவது சாவாமையாகிய அழியாமையாகும் – மரணம் ஊடுருவ முடியாத நிலைமை.

அப்படியானால் பாவஞ்செய்யும்முன் ஆதாம் இருந்த நிலைமை என்ன? எவ்விதமாய் சாபம் அவனைப் பிடித்துக் கொண்டது? அவன் அழிவுக்குள்ளாகக் கூடியவனாய் சிருஷ்டிக்கப்பட்டானானால், எவ்விதமான ஜீவனை அவன் இழந்து போகவேண்டியதாயிருந்தது?

அவனுடைய ஜீவனுக்குரிய நிலைமை தூதர்களுடைய ஜீவ நிலைமைக்கு ஒப்பானதாயிருந்தது. அவன் பூரண அளவில் ஜீவனை உடையவனாயிருந்தான்; அவன் தேவனுக்குக் கீழ்ப்படிதலுள்ளவனாக இருந்து, இந்த ஜீவனைச் சதாகாலமும் சுதந்தரித்துக்கொண்டிருந்திருக்கலாம். ஆனால் அவன் சாகக்கூடாதவனாயிராமல், அதாவது தன்னில் தானே ஜீவனை உடையவனாயிராமல், அவன் நிலையாய் உயிரோடிருப்பதற்கு தேவனுடைய சித்தத்திற்கும் தயவுக்கும் கீழ்ப்பட்டு, அவர்மேல் சார்ந்திருக்க வேண்டியதாயிருந்தபடியால், அவன் கீழ்ப்படியாவிட்டால் அவன் சாகவேண்டுமென்று தேவன் அவனுக்குக் கட்டளை கொடுத்த விஷயத்தில், ஏதோ விசேஷித்த கருத்து இருக்க வேண்டும். அவன் அழிக்கப்படக்கூடியவனாய் இராதிருந்தால் (அவன் சாவாமையுடையவனாய் சிருஷ்டிக்கப்பட்டிருந்தால்) தேவன் அவன் மேல் விதித்த தீர்ப்பானது வீண் மிரட்டுதலாய் இருந்திருக்கும். ஆனால் கீழ்ப்படிதலுள்ளவனாய் இருந்திருந்தால் அவனுடைய பூரண ஜீவன் தொடர்ச்சியாய் நிலைத்திருந்திருக்கும். ஆனால் தனது கீழ்ப்படியாமையினால் அவன் அதை இழந்துபோனான்; ஆகவே அவன் செத்தான்.

## யேகோவா இயல்பாகவே அழியாமையுள்ளவர்

இயல்பாகவே ஒருவராய் சாவாமையுள்ளவரும் (தம்மில் தாமே ஜீவனுள்ளவரும்) எல்லாவற்றையும் உண்டாக்கினவரு

மாகிய தேவனாகிய யேகோவா வெவ்வேறான வகுப்பாராகிய தேவதூதர்களையும், மனுஷரையும் தமது சொந்த சாயலின்படி சன்மார்க்கமும் பகுத்தறிவும் உள்ளவர்களாகச் சிருஷ்டித்திருக் கிறார். ஆனால் அவர்களை அழிவுள்ளவர்களாகவும் (அழிக்கப் படக்கூடியவர்களாகவும் – சாகக்கூடியவர்களாகவும்) அவருடைய தெய்வீக சுபாவமாகிய அழியாமை என்னும் சாவாமையற்றவர் களாகவும் சிருஷ்டித்திருக்கிறார். ஆனால் தம் மாதிரியின்படியே சன்மார்க்கமும் பகுத்தறிவும் உள்ளவர்களாய் மாத்திரமல்ல, ''**அவருடைய தன்மையின் சொரூபமாகவும்**'' ''**அவருடைய சொந்தத் தெய்வீக சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகவும்**'' ஒரு புது சிருஷ்டிப்பைச் செய்து முடிக்க அவர் கருதுகிறதாகத் தேவன் சொல்லியிருக்கிறார். தேவ சுபாவத்திற்குரிய முதன்மையான அடிப்படைத் தன்மை அழியாமை என்னும் சாவாமையேயாகும் (2 பேது. 1 : 4).

## இயேசுவும் அழியாமையுள்ளவர்

இந்த மேலான கனமும் மேன்மையும் யாருக்குக் கொடுக்கப்படும்? தேவ தூதர்களுக்கோ? கேரூபின்கள் சேராபின்களுக்கோ? இவர்களில் எவருக்குமல்ல. அது தேவனுடைய ஒரே பேறான குமாரனுக்கே கொடுக்கப்படும். அவர் தேவனுடைய ''முதற்பேறானவர்''; அவர் தேவனால் பிறப்பிக்கப் பட்ட சிருஷ்டிக்கப்பட்ட ஒரே குமாரனானவர்; அவரே மற்றெல்லா ருக்கும் மேலாக ''எல்லாவற்றிலும் முதல்வராயிருக்க வேண்டும்'' ஆனால் அவ்வளவு மேலான கனத்தை அடையக்கூடியதற்கு முன்னே அவர் பரீட்சிக்கப்பட்டு, அப்பரீட்சையின் பலனாக, ''**தமது தோழருக்கும் மேலாக**'' அவ்வளவு பெரிய மகிமைக்கும், மேலான கனத்துக்கும் ''பாத்திரவானாகத்'' தம்மைக் காண்பிக்க வேண்டும். ஆதாமின் மேலும், அவனுடைய இடுப்பிலிருந்த எல்லா மக்கள் மேலும் மரணத்தீர்ப்பு கூறப்பட்டபொழுது, இந்தப் பரீட்சை நேரிடுமென்று தெரிய வந்தது, ஆதாமும், அவனுடைய மீறுதலினாலே ஜீவனை இழந்தவர்களுமாகிய முழு மனுக்குலமும் ஜீவனை அடையும்படி கிறிஸ்து தமது ஜீவனை ஒரு மீட்கும் பொருளாக (பிரதிக் கிரையமாக) ஒப்புக்கொடுக்க வேண்டுமென்பதே, அந்தப் பரீட்சையாய் இருந்தது. அப்பரீட்சைக்கு அவரே தகுந்தவராயிருந்து, அதில் ஜெயம் பெற்று, தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கும் சுதந்திரமாகிய தெய்வீகத் தன்மையாகிய அழியாமையைப் பரிசாகப் பெற்றுக்கொண்டார்.

தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, அதின் பலனாக இப்பொழுது தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் (தேவ தயவு மிகுந்த ஸ்தானம்) வீற்றிருக்கிறவரை நினைத்துக்கொள்ளுங்கள். அவர் ஐசுவரியமுள்ளவராயி ருந்தும் நமது நிமித்தம் தரித்திரரானார். மீட்கப்படவேண்டியது மனுஷனும், அவன் சந்ததியுமாயிருந்தபடியால், மீட்கும் பொருளாகிய பிரதிக்கிரையத்தை வழங்கத்தக்கதாக, அவர் மனுஷனாக வேண்டியது அவசியமாயிருந்தது. தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்தார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு மரண பரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் தம்மைத்தாமே தாழ்த்தினார். ''**ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை** (உயிர்த்தெழுதலில் வாக்குத்தம்பண்ணப்பட்ட தெய்வீக சுபாவத்துக்கு) **உயர்த்தி** (யேகோவாவாகிய பிதாவினுடைய நாமம் நீங்கலாக 1 கொரி. 15 : 27) **எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்**'' (எபி. 12 : 2, 3; 2 கொரி. 8 : 9; பிலி. 2 : 7-11) ''**அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரரா யிருக்கிறார்**'' (வெளி. 5 : 9 - 12).

## சபை தெரிந்தெடுக்கப்படுதல்

அன்றியும் தேவதயவின் ஐசுவரியமானது கிறிஸ்து இயேசுவாகிய ஒருவரை மாத்திரம் மகிமைப்படுத்திவிட்டு அதோடு நின்று விடாமல், தேவனுடைய குமாரரான ஒரு கூட்டத்தார், ''**மகிமையையும், கனத்தையும், அழியாமையையும்**'' தேடிப்பெற்றுக் கொள்ளவும், இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசு அவர்களை வழி நடத்தவும் தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். (எபி. 2 : 10; ரோம. 2 : 7); என்றாலும் அவர்கள் ஒவ்வொருவரும் ''முதற் பேறானவருடைய'' அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடந்து ஆவிக்குரிய விஷயங்களில் அவருக்கொப்பாயிருக்கவேண்டும்.

மேலும் தெய்வீக இராஜ்யத்துவத்தின் சிறந்த கொள் கையாகவும், பரிணாமவாதக் கொள்கைக்குப் பெலத்த எதிரிடை யாகவும் இருக்கும்படிக்கு, (மணவாட்டியாகவும் ஆட்டுக்குட்டி யானவரின் மனைவியாகவும், உடன் சுதந்தரராகவுமிருக்க- வெளி. 21 : 2, 9; ரோம. 8 : 17) இந்த மேலான கனத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கான அழைப்புக்குப் பாத்திரவான் களாகும்படி, தேவதூதர்களையும் கேரூபின்களையும் தெரிந்து கொள்ளாமல், ஆட்டுக்குட்டியானவரின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்டுக் கொள்ளப்பட்ட பாவிகளின் மத்தி யிலிருந்து சில மனுஷரைத் தேவன் தெரிந்தெடுத்தார். இவ்விதமாய் உயர்த்தப்படவேண்டியவர்களின் தொகையையும் தேவன் தெரிந்தெடுத்து (வெளி. 7 : 4) அவ்வளவு மேன்மை யாய்க் கனப்படுத்தப்படுவதற்கு அக்கூட்டத்தின் ஓர் அங்க மாகும்படி, தங்களுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளு தலையும் நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டுமானால், அவர் களுடைய குணங்கள் எப்படிப்பட்டதாய் விளங்கவேண்டும் என்பதையும் தேவன் முன்னதாகவே விதித்தார். மீதியான விஷயங்கள் யாவும் பிதாவானவர் இதுவரைக்கும் கிரியை செய்தது போல் இப்பொழுது கிரியைசெய்து வருகிற கிறிஸ்துவினிடம் ஒப்படைக்கப்பட்டது. யோவா. 5 : 17.

''***சபை***'', ''***கிறிஸ்துவின் சரீரம்***'', ''***இராஜரீக ஆசாரியக் கூட்டம்***'', ''***ஆபிரகாமின் சந்ததி***'' (கலா. 3 : 29) முதலிய பல பெயர்களை உடைய இந்தக் கூட்டம் தெரிந் தெடுக்கப்படுவதின் காலம் சுவிசேஷ யுகமாகும். மேலும் தீமையானது இப்பூமியில் பிரவேசித்துக் கிரியை செய்ய இடங்கொடுக்கப்பட்டதின் நோக்கங்களில் ஒன்று, கிறிஸ்துவின் சரீரத்தின் இந்த அங்கங் களைத் தோன்றப்பண்ணுவதற்காகவும், தமது விலையேறப் பெற்ற இரக்கத்தினால் அவர்களைக் கிரையத்துக்குக் கொண்டவருக்காக ஊழியஞ்செய்து, இயல்பாகவே தங்களுக் குரியதாயிருப்பதையும், கிறிஸ்துவின் மீட்பின் பலனாகத் தங்களுக்குரியதான எல்லாவற்றையும் பலியிடுவதற்கு ஓர் அவகாசத்தை அருளுவதற்காகவும், இவ்விதமாய், தங்களுடைய கர்த்தரும் மீட்பருமானவரால் பிதாவுக்கு முன்பாக நிறுத்தப்படுகையில் - அவர் அவர்களில் ''தமது குமாரனுடைய சாயலைக்'' காணத்தக்கதாக அதற்கொப்பான ஆவிக்குரிய சாயலை அவர்களுடைய இருதயங்களில் தோன்றப் பண்ணுவதற்காகவுமாயிருந்தது. (கொலோ. 1 : 21; ரோம. 8 : 29).

## சபை அழியாமையைப் பெற்றுக்கொள்ளுகிறது

''முதற்பேறானவராகிய'' இயேசு மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி, தமது பலியை முடிவுபெறச் செய்து, ஓட்டத்தை

முடித்தபிறகே, அவருக்கு மகிமையும், கனமும், அழியாமை யுமாகிய பரிசுகளும், தெய்வீக சுபாவத்திற்குரிய மற்றெல்லாக் காரியங்களும் கொடுக்கப்பட்டதுபோல, சபையாகிய ''அவரு டைய மணவாட்டிக்கும்'' (சபையின் அங்கங்களை எல்லாம் ஒன்று சேர்த்து மொத்தமாய் ஒரே ஆளாகப் பாவித்துப் பேசப்படுகிறது) இவைகள் கொடுக்கப்படும். முதற் பேறான வரும், அதிபதியுமாகிய இயேசு தமது உயிர்த்தெழுதலில் ''தமது மகிமைக்குள் பிரவேசித்து'', மரித்தோரிலிருந்து ஆவியினால் பிறந்ததினால் பூரணமாய் தெய்வீக சுபாவத்திற்குப் பங்குள்ள வராகி, அப்பொழுது தேவனுடைய சிங்காசனத்துக்கும், மகா மேன்மையான தயவுக்கும் (வலது பாரிசத்துக்கு) உயர்த்தப் பட்டதுபோல, அவருடைய ''மணவாட்டியும்'' உயிர்த்தெழுதலின் வல்லமையினால் மானிட சுபாவத்தை விட்டு நீங்கி, தெய்வீக சுபாவத்தையும், அதற்குரிய மகிமையையும், கனத்தையும் அழியாமையையும் அடையும்படிக்கு அவளுடைய உயிர்த் தெழுதலில் மறுரூபமாக்கப்படுகிறாள்.

அப்படியே சபையின் உயிர்த்தெழுதலைக் குறித்து, ''**அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும், கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்தி ருக்கும்: பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்: ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்**'' என்று எழுதப்பட்டிருக்கிறது. 1 கொரி. 15 : 42-44, 49.

## தெரிந்தெடுப்புக்குட்படாதவர்களுக்கு இழந்துபோனவைகளைத் திரும்பப்பெறும் நம்பிக்கை உண்டு

ஆதாமின் குலத்துக்காகத் தேவனாலுண்டான இரட்சண்ய ஏற்பாடு ஆயிர வருஷ அரசாட்சிக் காலத்தில் ஒவ் வொரு மனிதனுக்கும் உரியதாகிறது; அந்த ஏற்பாடு யாதெனில்:- ஆட்டுக்குட்டியானவரின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் எல்லாருக்காகவும் உறுதிபண்ணப்பட்ட, புது உடன்படிக்கைக்குரிய நிபந்தனைகளை ஆதாரமாகக் கொண்டு நித்திய ஜீவன் அருளப்படுவதே ஆகும். ஆனால் சுவிசேஷ யுகத்தில் தெரிந்தெடுக்கப்படும் சபையைத் தவிர (ஆட்டுக்குட்டி யானவரின் மனைவி என்ற மணவாட்டியாகிய சிறு மந்தையைத் தவிர) வேறெவருக்கும் எப்பொழுதாவது தெய்வீக சுபாவமாகிய அழியாமை அருளப்படும் என்பதற்கு வேத புத்தகத்தில் ஒரு அத்தாட்சியும் கிடையாது. ஆதாமின் குலத்திலுள்ள மற்றவர் களுக்கு - பொதுவாக மனுக்குலம் முழுவதுக்கும் - அருளப் படுவது மனுஷர்களுக்குரிய ஜீவன், சுகம், பூரணம் முதலிய வைகள் திரும்பக் கொடுக்கப்படுவதே ஆகும். (அப். 3 : 19-21)- ஆதாம் தேவக்கிருபையினின்று நீங்கி, பாவத்திலும் மரணத்திலும் விழும்முன், அதாவது அவன் தேவனுடைய பூமிக்குரிய சாயலில் சம்பூரணனாயிருக்கையில், அனுபவித் தவைகள் மனுக்குலத்துக்குத் திரும்பக் கொடுக்கப்படும்.

## உலகத்திற்குரிய முடிவான பரீட்சை

ஆயிர வருஷ யுக முடிவில் மனுக்குலத்தில் கீழ்ப் படிதலுள்ள அனைவரும், ஆதாமுக்குள் இழந்து போனதும், கிறிஸ்துவினால் மீட்டுக் கொள்ளப்பட்டதுமான சகலத்தையும் பெற்றுக் கொண்ட பின்பு, அவர்களெல்லாரும் பூரண அறிவை யும் அனுபவத்தையும் அடைந்து பரீட்சைக்கு நிலைநிற்கத் தகுதியும் திராணியுள்ளவர்களாய் இருப்பார்கள். ஆதலால், எல்லோரும் (ஆதாமைப்போல) தனித்தனியாய், கடுமையாய் பரீட்சிக்கப்படுவார்கள்; தேவனோடும், அவருடைய நீதியான ஏற்பாடுகளோடும் இருதயப்பூர்வமாக கிரியைகளில் பூரண இசைவும் இணக்கமும் உள்ளவர்களாய்க் காணப்படுகிறவர் களே, ஆயிர வருஷ யுகத்துக்குப் பின்பு முடிவில்லாத காலமாய் சதாகாலமும் உயிரோடிருக்க இடம்பெறுவார்கள்; மற்றவர்க ளெல்லாரும் இரண்டாம் மரணத்தினால் அழிக்கப்படுவார்கள் – ''**ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவார்கள்**'' - அப். 3 : 23.

## தெரிந்தெடுப்புக்குட்படாதவர்களுக்கு அழியாமை இல்லை

அன்றியும், ''**இனி மரணமும், துக்கமும், அலறு தலுமிராது**'' என்று சொல்வது, ஆயிர வருஷ யுகத்தில் ஜெயம் பெறுகிறவர்கள் எல்லோரும் அழியாமையாகிய சாவாமையைச் (தங்களில் தாங்களே ஜீவனுடையவர்களாய் இருக்குதலைசி) சுதந்தரித்துக் கொள்வார்களென்ற கருத்தைக் கொடாது; ஏனென்றால் அவர்கள் நன்மையையும், தீமையையும், அவைகளின் பலாபலன்களையும் வெவ்வேறாகப் பிரித்துக் கற்றறிந்து, தேவனுக்கும் சத்தியத்துக்கும் பூரணமாய் பொருந் தக்கூடிய குண இலட்சணங்களை உடையவர்களாக இருப்பதோடு, பாவஞ்செய்யும்படிக்கான வழி திறக்கப்பட்டு, பாவஞ்செய்தால் தண்டனை கிடையாதென்று விதி ஏற்பட்டாலும், அவர்கள் பாவஞ் செய்ய விரும்பமாட்டார்கள் என்ற சங்கதியை வெளிப்படுத்திக் காட்டக்கூடிய பரீட்சைகளுக்கெல்லாம் அவர்கள் நிலைபெற்று நின்றிருப்பார்களானபடியால், இனி (ஆயிர வருஷ யுகத்துக்குப் பின்) இப்பூமியிலே மரணமும், துக்கமும், அலறுதலுமிராது; ஆனால் அவர்கள் தங்களில் தாங்களே ஜீவனுடையவர்களாய் இருக்கமாட்டார்கள்; ஜீவனின் பராமரிப்புக் காக ஆகாரம், வெளிச்சம், (காற்று) ஆகாயம் முதலிய தேவனுடைய ஈவுகளின் மேல் பின்னும் சார்ந்தவர்களாகவே இருப்பார்கள், இது பின்வரும் வாக்கியங்களில் விசேஷித்துச் சொல்லப்படுகிறது:- வெளி. 21 : 4, 6, 8; 7 : 16, 17; மத். 5 : 6.

வேதப்புத்தகம் வெளிப்படுத்துகிற அறிவைக் கொண்டு நாம் ஆராய்ந்தறியும்பொழுது, அழியாமையைப் பற்றி விவரிக்கப்படும் விஷயம் மிகச் சிறப்புள்ளதாகவும், தெளிவான தாகவும் விளங்குகிறது. தேவனுடைய பொதுவான கிருபை வரமாகிய நித்திய ஜீவன், ஓர் ஆசீர்வாதமாக இருக்கக்கூடியதாக எந்த நிபந்தனைகளின் பேரில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமோ அந்த நிபந்தனைகளின் பேரில் மாத்திரம் அதை ஏற்றுக் கொள்ள விருப்பங்கொள்ளுகிற அனைவரும் அதை அடைந்து கொள்ளும்படி அழியாமையைப்பற்றிய விஷயம் (வேத உபதேசம்) சரியான வழிவகைகள் ஏற்படும்படி செய்கிறதுமன்றி, நித்திய ஜீவனை அடைய அபாத்திரவான்களாய்ப் போகிறவர்கள் அனைவரையும் யாவருக்கும் பெரிய நியாயாதிபதியாகிய சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனால் எப்போதைக்கும் கூறப்படுகிற நீதியான தண்டனைக்கு உள்ளாக்கவும் அது இடமுண்டாக்குகிறது; அந்த நீதியான தண்டனை பின்வரும் வாக்கியங்களில் கூறப்பட்டுள்ளது :-

''**பாவத்தின் சம்பளம் மரணம்**'' (**ரோம. 6 : 23**).

''**... பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்**'' (**எசே. 18 : 4, 20**).

''**தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்**'' (**யாக். 5 : 20**).

''**குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்ப தில்லை: தேவனுடைய கோபம் (சாபம், மரணம்) அவன் மேல் நிலை நிற்கும்**'' **(யோவா. 3 : 36).**

இவ்விதமாக, மற்ற விஷயங்களில் நாம் அறிந்துகொள்ளுகிறதுபோலவே இந்த விஷயத்திலும் பிற சமயத்தாரின் ஏற்பாடுகளையும் கொள்கைகளையும் விட தேவனுடைய வசனத்தில் அடங்கிய தத்துவ ஞானமானது (நியாயப் போக்கானது) ஆழ்ந்த கருத்துடையதும், மிகுந்த தெளிவானதும், சிறந்த நியாய யுக்தியுமானதுமாய் (யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விவேகத்தோடு இசைந்ததுமாய்) இருக்கிறதென்று நாம் காண்கிறோம். தேவன் தமது சத்திய வசனத்தை நமக்குத் தந்தருளினதற்காகவும், அவருடைய ஞானத்தையும் வல்லமையையும் காண்பிக்கும் வெளிப்படுத் தலாக அதை ஏற்றுக்கொள்ளும்படி நமது இருதயங்களைப் பக்குவப்படுத்தினதற்காகவும் அவரை ஸ்தோத்தரிப்போமாக!

***

# பாவத்தின் சம்பளம் (பாவத்திற்குரிய தண்டனை)

**''பாவத்தின் சம்பளம் மரணம்''. ''ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே (பாவத்தின் பலனாக) மரணமும் உலகத்திலே பிரவேசித்தது'' (ரோம. 6 : 23; 5 : 12).**

''பாவத்தின் சம்பளம் நித்திய வேதனை'' என்ற தற்கால மத நம்பிக்கையின் போதனையானது மேலே காட்டிய இரு வேதவாக்கியங்களுக்கும், மற்றும் அநேக வாக்கியங்க ளுக்கும் நேர் எதிரிடையானது. வேதபுத்தகம் சொல்லுகிற விஷயம் எவ்விதத்திலும் நியாயமும் ஒப்புக்கொள்ளத் தக்கதுமானது. நியாயத்தையும் வேத வாக்கியங்களையும் ஆதாரமாகக் கொள்ளாத சாதாரண அபிப்பிராயமோ யுக்தி நியாயத்துக்கு விரோதமாயும் ஒவ்வாத கருத்துடையதாயும், தேவனுடைய வசனத்தில் காட்டியபடியேயுள்ள அவருடைய ஏற்பாட்டிற்கும் குணாதிசயங்களுக்கும் மிகக் கடுமையான விரோதமானதாயும் இருக்கிறது.

## நித்திய வேதனைக் கொள்கைக்குப் பிற சமயமே ஆதிமூலம்

நித்திய வேதனைக் கொள்கை முதலில் பிற சமயத்தாருக்குள் உண்டானது; என்றாலும் அது அவர்களுக்குள் வழங்கி வந்த முறைப்படி இரக்கமற்ற கோட்பாடாக இருந்ததில்லை; ஆனால் பேர் கிறிஸ்தவ மார்க்கமானது இரண்டாம் நூற்றாண்டில் பிற சமயத்தாருடைய வேதாந்தத் தோடு கலந்து போய்க்கொண்டிருந்த காலத்தில் அக்கொள்கை பேர்க் கிறிஸ்தவ மார்க்கத்தைப் படிப்படியாய்ப் பற்றிக் கொள்ள ஆரம்பித்தபொழுது அது இரக்கமற்ற கோட்பாடாக விளங்கினது. ஆகவே சமயநிலைத் தவறு ஆகிய விசுவாசத் துரோகம் நேரிட்டபொழுது இப்பொழுது சாதாரணமாய் நம்பப்படுகிற பயங்கரமான விவரிப்புகளை பிறமதஸ்தருடைய வேதாந்தத் தோடு பொருந்தப் பண்ணினதுமன்றி, அவைகளைக் கோவில் சுவர்களில் சித்திரமாக வரைந்து காட்டவும், விசுவாசப் பிரமாணங்களிலும் ஞானப்பாட்டுகளிலும் அவைகளை நுழைத்து எழுதவும், தேவனை அவமானப்படுத்துகிற தப் பறைக்குத் தெய்வீக (வேத) ஆதாரமுண்டு என்பதுபோல் காட்டி, தேவ வசனத்தைப் புரட்டி, அதின் போதனைகளைத் தாறுமாறாக் கவும் பேர்க்கிறிஸ்தவ மார்க்கமானது துணிந்துவிட்டது. ஆகவே நித்திய வேதனையின் உபதேசத்தைக் கர்த்தரிடமிருந்தோ, அப்போஸ்தலரிடமிருந்தோ, தீர்க்கதரிசிகளிடமிருந்தோ பெற்றுக் கொள்ளாமல், உலக அதிகாரத்தையும் ஐசுவரியத்தையும், ஜனத்தொகைப் பெருக்கத்தையும் அடையவேண்டுமென்று அவலட்சணமான பேராசைகொண்டு, பிற மதஸ்தரோடு போட்டிபோட்டு சத்தியத்தையும், பகுத்தறிவையும் பாழாக்கி, கிறிஸ்து மார்க்கத்தின் உபதேசங்களை மகா கேவலமாய் தாறுமாறாக்கிக் கெடுத்த குரு வகுப்பாரிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்கள். தற்காலத்தில் எதையும் எளிதில் நம்பக்கூடிய தன்மையுடைய ஜனங்கள், தங்களுடைய பகுத்தறிவையும், நியாயத்தையும் பிரயோகிக்காமல், ஓர் மரண சாசனப் பொருளை பெற்றுக் கொள்வதுபோல குரு வகுப்பாரிடமிருந்து அக்கொள்கையைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

## நித்திய வேதனைக் கொள்கை பேர்க்கிறிஸ்தவர்களால் தங்களுக்குரியதாக்கிக் கொள்ளப்பட்டது

பாவத்திற்குரிய தண்டனை நித்திய வேதனை (சித்திரவதை) என்று கடந்துபோன யுகங்களிலுள்ள ஆதிப்பிதாக் களாலும், யூத யுகத்திலுள்ள தீர்க்கதரிசிகளாலும், நமது கர்த்தராலும், அப்போஸ்தலர்களாலும் போதிக்கப்படவே இல்லை; ஆனால் விசுவாசத் துரோகம் நேரிட்ட காலமுதல் அது பேர்க்கிறிஸ்தவ மார்க்கத்தின் முக்கியமான கோட்பாடாக இருந்து வந்திருக்கிறது. எளிதில் எதையும் நம்பக்கூடியவர்களும், பேதை களும், மூட பக்தியுள்ளவர்களுமான ஜனங்களைக் கொடுங் கோன்மைக்கு அடிமைத்தனமாகப் பணியவைக்க அது ஒரு சவுக்கு போல் இருந்து வந்திருக்கிறது.

ரோமாபுரி அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவர்களும் அதைத் தூஷித்துத் தள்ளுகிறவர்களும் நித்திய வேதனையை அடைவார்கள் எனக் கூறப்பட்டது. தனக்கு எவ்வளவு அதிகார முண்டோ அந்த அதிகாரத்துக்குத் தக்கபடி அத்தண்டனையைத் தற்காலத்தில் விதிப்பதும் ஏற்பட்டது; மேலும் அதினுடைய தொண்டர்கள் எவராவது அடங்காத தன்மையுடையவர்களாகக் காணப்பட்டால், அது விதிக்கக்கூடிய அளவில் அவர்களுக்கு உத்தரிப்புஸ்தலத்தில் வேதனைகள் கிடைக்குமென்று நம்பும்படி செய்து, அவர்களைப்பயமுறுத்தினது. தங்களைத் தாங்களே மகா மேன்மையாய் உயர்த்திப் பேசிக்கொள்ளும் உடன் மனுஷருக்கு, அறியாமையினாலும், மூடநம்பிக்கையினாலும் உண்டான மதிப்பையும், வணக்கத்தையும் கொடுத்துப் பயங்கரமான அடிமைத்தனத்திற்குட்பட்டுப் போனதினாலும், தேவனுடைய உண்மையான ஏற்பாட்டைக் கொஞ்சமேனும் அறிந்து கொள்ளாமல், முழு அறியாமையிலிருந்தபடியாலும், நித்தியவேதனையை அடைவோம் என்று மிகுந்த பயங்கொண்டு

மனச் சோர்வடைந்தபடியாலும், திரள் திரளான ஜனங்கள் தங்களுடைய பகுத்தறிவையும் தேவனுடைய வசனத்தையும் கைவிட்டு விட்டார்கள். அதுவுமல்லாமல், இப்போதுங்கூட நமது நாட்களில் பெருகி வரும் அறிவாகிய வெளிச்சத்தை ஆதாரமாகக் கொண்டு, தேவ பக்திக்கடுத்த விஷயத்தையும், வேத புத்தகத்தையும் தாங்களாகவே ஆராய்ந்தறியத் துணிவது மனிதருக்கு மகா அரிதான காரியமாயிருக்கிறது. ஏசா. 29 : 13.

புற மதஸ்தருடைய கொள்கைகள் நிரம்பியுள்ள பேர்ச்சபைப் பாரம்பரியங்களுக்கு எதிரிடையாக, தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்டு வேதபுத்தகத்தை எழுதினவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கவனித்து, எது சத்தியம் என்பதையும், எது தப்பறை என்பதையும் யுக்தி அறிவே (பகுத்தறிவே) தீர்மானிப்பதாக.

## சித்திரவதைக் கோட்பாடு பழைய ஏற்பாட்டில் இல்லை

முதலாவது பழைய ஏற்பாட்டைக் கவனியுங்கள்; இது 4000 வருஷக் காலமாக உள்ள தேவ வெளிப்பாடு. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் நித்திய வேதனையைப் பற்றி ஒரு வார்த்தைகூட சொல்லக் காணோம். ஆனால் பாவிகளுக்குரிய முடிவான தண்டனைஅழிவு என்றும், கர்த்தருடைய சத்துருக்கள் அழிந்துபோவார்கள் என்றும் அவர்கள் திரும்பத்திரும்பப் பலமுறையும் சொல்லுகிறார்கள். மோசேயின் மூலமாய் இஸ்ரயேலருக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமானமானது, அதை மீறும் விஷயத்தில் மரணத்தையே தண்டனையாக விதிக்கிறதேயன்றி வேறு எவ்வகைத் தண்டனையையும் ஒருக்காலும் குறிப்பிடுகிறதில்லை. ஏதேன் தோட்டத்தில் ஆதாம் பரீட்சை நிலைமையில் வைக்கப்பட்டபொழுது, அவன் தவறுதலையடைந்து தேவனுக்குக் கீழ்ப்படியாமை காட்டும் விஷயத்தில் தேவனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட எச்சரிப்பு மரண தண்டனையை வசனித்ததேயன்றி, அதில் நித்திய வேதனையைப் பற்றிய உபதேசம் எவ்வளவும் கிடையாது. ''**அதை நீ புசிக்கும் நாளில் செத்துக்கொண்டு சாவாய்**'' (ஆதி. 2 : 17; ஆங்கில வேதாகம மார்ஜின் காண்க. ஆதி. 2 : 17-ஐ; 2 பேது. 3 : 8 உடன் ஒப்பிட்டுப் பார்).

கீழ்ப்படியாமைக்கும் தவறுதலுக்குமுரிய தண்டனை, வேதனையுடன் கூடிய நித்திய ஜீவனாய் இருக்குமானால், ஆதாம், ஆதிப்பிதாக்கள், யூத ஜனங்கள் முதலியவர்களிடம், கீழ்ப்படியாமைக்கு மரணமே தண்டனையாகும் என்று தப்பிதமாய் அறிவித்தது, மெய்யாகவே மன்னிக்கப்படக் கூடாத அநியாயமாகும். மனுக்குலத்தில் பெருந்தொகையானோர் நித்திய வேதனையை அடைவார்கள் என்று கிறிஸ்தவ மண்டலத்திலுள்ள பற்பல பிரிவினர்களுடைய கோட்பாடுகள் சாதிக்கிறபடி, ஆதாமும், ஆதிப் பிதாக்களும், யூதரும் நித்திய வேதனையை அடைவார்களானால் அவர்கள் நீதிக்காக மன்றாடுவதற்குத் தகுதியான காரணமுடையவர்களாவார்கள். மேலும் தேவனைப் பற்றிய அறிவு இல்லாமலும், அதின் பலனாக மெய்யாகவே விசுவாசமும் தேவ பக்தியுமில்லாமல் மரித்துப்போன கோடிக் கணக்கான புற மதஸ்தர்களும் அப்படிப்பட்ட தண்டனையினால் ஏற்படக்கூடிய அநீதியை எதிர்த்து, இது வல்லமையை மகா கொடிதான பிரகாரமாய் துர்வினியோகஞ் செய்வதாகும் என்று அவர்கள் பல தீய மொழிகள் சொல்வதற்கு நீதியான காரணமுடையவர்கள் ஆவார்கள்; ஏனென்றால், முதலாவதாக, கொடிய பயங்கரமும் அநியாயமுமான தண்டனைக்கு உள்ளாக்கும் ஓர் பரீட்சை நிலைமைக்குள் அவர்களுடைய சம்மதமில்லாமல் அவர்களை உட்படுத்துவதும், இரண்டாவதாக அப்படிப்பட்ட ஓர் தண்டனை உண்டென்று அறியாதபடி ஒரு வகுப்பாரை முற்றிலும் அறியாமலிருக்க விட்டுவிடுவதும், மற்றவர்களுக்குப் பாவத்திற்குரிய தண்டனை மரணம் அதாவது அழிந்து போகுதல் என்று சொல்லி அவர்களைத் தப்பு வழியில் நடத்துவதும் (ஏமாற்றி மோசஞ் செய்வதும்), வல்லமையைத் துர்ப்பிரயோகம் பண்ணுவதாகுமேயன்றி, அசட்டைசெய்கையில் தேவனுடைய நீதியும், ஞானமும், அன்பும் விளங்கவே மாட்டாது. மரணம், அழிவு ஆகிய இவை போன்ற வார்த்தைகள் வேதனையுடன் கூடிய ஜீவன் என்று அர்த்தங்கொடுக்கிறதென்று சொல்லும்படிக்கான துணிவான எண்ணம், அப்போஸ்தலருடைய நாட்கள் முதற்கொண்டு வார்த்தைகளின் கருத்துகளைப் புரட்டி, தாறுமாறாக்கிக் கெடுத்துவரும் வேத சாஸ்திரிகள் என்போருக்குரியதென்பது ஒப்புக்கொள்ளப்படவேண்டிய காரியமாகும்; ஏனென்றால், நாம் பின்னால் நிரூபிக்கப்போகிறபடி அப்போஸ்தலர்கள் இவ் விதமாகப் போதித்ததில்லை.

## சித்திரவதைக் கோட்பாடு புதிய ஏற்பாட்டில் இல்லை

புதிய ஏற்பாடு எழுத்துக்களைக் கவனியுங்கள். ''**தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் மறைத்துவைக்காமல் எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்**'' என்று சொல்லுகிற (அப். 20 : 26) பரிசுத்த பவுல், நித்திய வேதனையைப்பற்றி ஒரு வார்த்தைகூட எழுதவில்லை. அப்படியே பரிசுத்த பேதுரு, பரிசுத்த யாக்கோபு, பரிசுத்த யூதா, பரிசுத்த யோவான் முதலிய அப்போஸ்தலர்களும் நித்திய வேதனையைப்பற்றி ஒரு வார்த்தைகூட எழுதவே இல்லை; என்றாலும் பரிசுத்த யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தில் அறிகுறிகளில் எழுதியிருக்கிறாரென்று வாதாடப்படுகிறது; ஆனால், இப்படிச் சொல்லுகிறவர்கள் அந்த ஆகமம் அவர்களுக்கு விளங்காததும் அவர்கள் அறிந்துகொள்ள முடியாததுமான முத்திரை போடப்பட்ட புத்தகமென்று எண்ணுகிறபடியால், அதிலடங்கிய அறிகுறிகளை அலட்சியஞ்செய்து, பரிசுத்த யோவான் அறிகுறிகளில்லாமல் தெளிவான நடையில் எழுதியிருக்கிற நிரூபங்கள் உட்பட வேத புத்தகத்தின் மற்ற ஆகமங்களுக்கு நேர் எதிரிடையாக அதின் எந்தப் பாகத்தையாவது சொல்லர்த்தத்தில் வியாக்கியானப் படுத்துவதற்கு அவர்களுக்கு உரிமை கிடையாது.

அப்போஸ்தலர்கள் நித்திய வேதனையைப்பற்றி யாதொன்றுஞ் சொல்லாததினால், இருண்ட யுகங்களிலுண்டான மறுதலித்துப்போன சபையல்ல, அப்போஸ்தலர்களே, ''தேவனுடைய ஆலோசனைகளெல்லாவற்றையும்'' அறிவித்தவர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும். சத்தியத்தைக் கண்டறிய முயலுகிற யாவரும் விசேஷமாய் கிறிஸ்தவர்கள் பாவத்திற்குரிய தண்டனையைப்பற்றி அவர்கள் போதிக்கிறதென்ன என்று ஆராய்ந்தறிய ஆசைப்படுகிறவர்களாயிருக்க வேண்டும்.

பவுல் அப்போஸ்தலன் சொல்கிறதாவது:- ''**பாவத்தின் சம்பளம் மரணம்**''; கீழ்ப்படியாதவர்கள், கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி நித்திய அழிவாகிய தண்டனையை

அடைவார்கள் ''**கிறிஸ்துவினுடைய சிலுவைக்குப் பகைஞரானவர் களுடைய முடிவு அழிவு**'' என்பதே. ரோம. 6 : 23; 2 தெச. 1 : 10; பிலி. 3 : 18, 19.

யோவான் அப்போஸ்தலன் சொல்கிறதாவது:- ''**உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்: தேவனுடைய சித்தத் தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்**''; ''**பாவஞ் செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்: ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ் செய்கிறான்: பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப் பட்டார்**''; ''**சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான்**''; ''**தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்: மனுஷ கொலைபாதகன் எவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராதென்று அறிவீர்கள்**''; ''**குமாரனையுடையவன் ஜீவனையுடையவன்: தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்**'' என்பதே. 1 யோவா. 2 : 17; 3 : 8, 14, 15; 5 : 12.

பேதுரு அப்போஸ்தலன் சொல்கிறதாவது:- ''**அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ (கீழ்ப்படியாதவர்கள்) அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்**''. ''**பொல்லாத வர்கள் தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள் வார்கள்**''; ''**ஒருவரும் கெட்டுப்போகாமல் (அழிந்து போகாமல்) எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி கர்த்தர் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்**'' என்பதே. அப். 3 : 23; 2 பேது. 2 : 1; 3 : 9.

யாக்கோபு அப்போஸ்தலன் சொல்கிறதாவது:- ''**பாவம் பூரணமாகும் போது மரணத்தைப் பிறப்பிக்கும்**''; ''**நியாயப் பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே: அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர்**'' என்பதே. யாக். 1 : 15; 4 : 12.

## உண்மையான தண்டனை கடுமையாய் இருந்தாலும் நீதியுள்ளது

பாவத்துக்குரிய தண்டனையாக வேத புத்தகத்தில் விதிக்கப்பட்ட தண்டனையானது மிக இலேசான தண்டனை யாகும் என்று, அவ்விஷயத்தைப் படித்தறிந்த எவரும் மதிக்கமாட்டார்கள். அது மிக இலேசான தண்டனையாக இராமல், ''நீதியான பிரதிபலன்'' ஆக இருக்கிறது. ''**தேவனுடைய கிருபை வரமோ – நித்திய ஜீவன்**'' என்று அப்போஸ்தலன் சொல்கிறார் (ரோம. 6 : 23). மேலும் ஆதாமுக்கும், அவன் மூலமாய் அவனுடைய சந்ததிக்கும் அருளப்பட்ட அந்தக் கிருபையைத் தகுதியான பிரகாரமாய் உபயோகப்படுத்தினால் மாத்திரம், அதாவது கீழ்ப்படியாமையினாலும் பாவத்தினாலும் தேவனை அவமதிக்காமல், தங்களுடைய சம்பூரண வாழ்வினாலும், நற்கிரியையினாலும் அவரை மகிமைப் படுத்தினால் மாத்திரம் அது நிலைத்திருக்கக்கூடியதாயிருந்தது.

தொடர்ந்தேர்ச்சியாய் உயிரோடிருக்க, அபாத்திர மானதாக தேவன் எண்ணுகிற எதையும் அழித்துப் போடுவதற்குரிய வல்லமையையும் உரிமையையும் அவர் தாமே சிருஷ்டிப்பில் தம் வசத்தில் வைத்துக் கொள்ளுகிறார். தேவன் மனுஷனுக்குக் கொடுத்திருந்த தயவை, அவன் பாவஞ் செய்தபொழுது தவறான வழியில் உபயோகித்தபடியால், அவர் அதை ரத்துசெய்துவிட்டார்; அதின் பலனாக மானத, சன்மார்க்க, சடத்துவ தேய்வும், வேதனையும், வருத்தமும், வியாதியும், சாகுங்கிரியையும் அவனில் இயல்பாகவே ஏற்பட்டு மரணம் (அழிவு) அவனுக்குச் சம்பவித்தது.

தேவன் ஒரு மீட்பரைச் சித்தஞ்செய்து தந்தருள வில்லையானால், ஆதாமின் மூலமாய் நமது குலத்துக்கு ஏற்பட்ட மரண தண்டனையானது சதாகாலமும் நிலைத்திருப்ப தாயிருக்கும்; ஆனால் தேவனுடைய இரக்கத்தினாலே எல்லாரும் மரணத்திலிருந்து மீட்கப்பட்டிருக்கிறார்கள்; ஆகிலும் என்றும் மாறுதலைடையாத அதே தேவப் பிரமாணத்திற்கு எல்லாரும் தனித் தனியே மறுபடியும் கீழ்ப்பட வேண்டும் – அந்த தேவப் பிரமாணம் என்னவென்றால்:- ''**பாவத்தின் சம்பளம் மரணம்: தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலுண்டான நித்திய ஜீவன்**'' என்பதே.

## சித்திரவதைக் கோட்பாட்டை இயேசு போதித்தாரா?

நமது கர்த்தராகிய இயேசு எப்பொழுதாவது நித்திய வேதனை என்ற வார்த்தைகளை உபயோகித்தாரா? அல்லது நித்திய வேதனையிலிருந்து மனுஷரை இரட்சிக்க உலகத்திற்கு அவர் வந்ததாக சூசனையாகவாவது, ஜாடையாகவாவது ஒரு தடவையாவது தெரிவித்தாரா? ஒருக்காலும் அவர் அப்படி அறிவிக்கவே இல்லை. ஆகிலும் இது உண்மையாயிருந்து, அவரை ஏற்றுக்கொள்ளாததினிமித்தம் அவ்வளவு பயங்கரமான ஓர் தண்டனையை அவர்கள் அடைவார்களானால், அவ்வளவு விசேஷித்த சத்தியத்தை (நித்திய வேதனைக் கொள்கையை) அவர் அவர்களுக்குச் சொல்லாதது, அவர் நீதியும் இரக்கமும் உள்ளவரல்ல என்று காண்பிக்கும். என்றாலும் மரணத்தி லிருந்து – அழிவிலிருந்து – அவர்களை இரட்சிக்க வந்ததாக அவர் அவர்களுக்குச் சொன்னார். ஆதாமுக்குள் இழந்துபோன வைகளாகிய நீதியையும், அதற்குரிய விசேஷ உரிமைகளாகிய நித்திய ஜீவனையும், தேவ தயவையும் அடைந்து கொள்வதற்கேதுவாக கிறிஸ்து அவர்களை மரணத்திலிருந்து மீட்டுக்கொள்ளாவிட்டால், பாவத்திற்குரிய தண்டனையாகிய மரணம் எல்லார் மேலும் விதிக்கப்பட்டிருக்கிறதினிமித்தம், பிற்கால ஜீவனை அடைய, உயிர்த்தெழுதலை ஒருவரும் எதிர்பார்க்க முடியாமல், எல்லாரும் நம்பிக்கையற்று அழிந்து போய்க் கொண்டிருப்பார்கள். இரட்சகர் என்பது நமது கர்த் தருடைய விசேஷித்த பெயர். இப்பெயர் இந்த ஆராய்ச்சியில் விசேஷம் பெற்றதாயிருக்கிறது; வேதனை சித்திரவதை) –யிலிருந்து இரட்சிக்கிற ஓர் இரட்சகர். அல்லது மீட்பர், என்ற கருத்தை அது கொடாமல், மரணத்திலிருந்து இரட்சிக்கிற ஓர் இரட்சகர் என்ற கருத்தைக் கொடுக்கிறது. கர்த்தரும் அப்போஸ்தலர்களும் சமாரியர்களுடைய பாஷையையும் உபயோகித்து வந்தார்கள். அந்தப் பாஷையில் இரட்சகர் என்ற வார்த்தைக்கு ''ஜீவன் கொடுக்கிறவர்'' என்று அர்த்தம்.

## இயேசுவின் முக்கியமான வேலை

தாம் உலகத்துக்கு அனுப்பப்பட்டதின் நோக்கத்தைப் பற்றியும் தமது விசேஷித்த ஊழியத்தைப் பற்றியும் நமது கர்த்தர் என்ன சொன்னார்? ''***சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையைப் பிரசித்தப்படுத்த வந்தேன்***'' என்று சொன்னார். எந்த சிறைப்பட்டவர்களுக்கு? பாவத்திற்குச் சிறைப்பட்ட வர்களாகி (அடிமைகளாகி) அதற்குரிய தண்டனையைத் தினந்தோறும் பெற்றுக்கொள்ளுகிற – கொஞ்சங் கொஞ்சமாய்ச் செத்துப் பெரிய சிறைச்சாலையாகிய பிரேதக்குழிபோய்ச்

சேருகிற – சிறைகளுக்கே விடுதலையைப் பிரசித்தப்படுத்த வந்தார். சிறைச்சாலைக் கதவுகளைத் திறக்க வந்தேன் என்று அவர் சொன்னார். தீர்க்கதரிசி சொல்லியிருந்த பிரேதக் குழியையன்றி வேறெந்த சிறைச்சாலையையும் பற்றி அவர் சொல்லவில்லை (ஏசா. 61 : 1; லூக். 4 : 18). மனுக்குலமானது ஜீவனை அடையவும் மனுஷர் கெட்டுப்போகாமல் (அழிந்து போகாமல்) தம்மை விசுவாசித்து நித்திய ஜீவனை கொடுக்கவும் அவர் வந்தாரென்று அவர் வெளிப்படையாய்க் கூறினார். மேலும் ''**ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்க முமாயிருக்கிறது, கேட்டுக்குப் – அழிவுக்குப் – போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது**'' என்றும் அவர் சொன்னார். யோவா. 10 : 10; மத். 20 : 28; யோவா. 3 : 16; மத். 7 : 13, 14.

நமது கர்த்தராகிய இயேசு தமது மரணத்தினால் மனுக்குலத்தை மீட்டுக்கொண்டாரென்றும், பாவத்திற்குரிய தண்டனையாகிய மரணத்திலிருந்து மனிதன் விடுதலையாக்கப் படத்தக்கதாக மனிதனுடைய பாவங்களுக்குரிய தண்டனையை அவர் மனப்பூர்வமாய்ச் சகித்தாரென்றும், விசுவாசத்தில் உண்மையுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற கிறிஸ்தவர் களால் சாதாரணமாய் ஒப்புக்கொள்ளப்படுகிறது. மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். ''**நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப் பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது: அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.**'' ஏசா. 53 : 4, 5.

### ஆட்சேபிக்கக் கூடாத ஓர் நியாயம்

நமது கர்த்தராகிய இயேசு மனுக்குலத்தைத் தமது மரணத்தினால் மீட்டுக்கொண்டார் என்ற சங்கதி ஒப்புக்கொள்ளப் படுகிறபடியால், ''**நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை (தண்டனை) அவர்மேல் வந்தபொழுது**'', நமது கர்த்தராகிய இயேசு சகித்தது என்ன என்பதை நாம் அறியும்பொழுது, நமது பாவங்களுக்குரிய தண்டனை எது என்பதை சற்றாகிலும் மறுக்கக்கூடாத நிச்சயமாக நாம் எளிதில் தீர்மானிக்க ஏதுவாகிறது. அவர் நமக்காக நித்திய வேதனையை (சித்திரவதையை) அடைந்துகொண்டிருக்கிறாரா? அப்படியி ருக்குமானால், அது நமது பாவங்களுக்குரிய தண்டனையா யிருப்பதாக நிரூபிக்கப்படலாம்; ஆனால் ஒருவராகிலும் இவ்விதமாக, அதாவது, நமது கர்த்தர் வேதனையடைந்து கொண்டிருக்கிறதாகச் சொல்லுகிறதில்லை. வேத வாக்கியங் களும், இதற்கு மாறாகவே, நமது கர்த்தர் இப்பொழுது வேதனையடைந்து கொண்டிராமல் மகிமையடைந்திருக்கிறார் என்று போதிக்கின்றன. இதுவே, பாவத்தின் சம்பளம் நித்திய வேதனையல்ல என்பதற்கு ஆட்சேபிக்கக்கூடாத ஆதார மாயிருக்கிறது.

ஆனாலும் நமது பாவங்களை ரத்துச் செய்வதை அடைந்து கொள்ள நமது கர்த்தர் செய்கிறதென்ன? பாவி களுக்கு விரோதமாய் உண்டான தண்டனையிலிருந்து அவர்களை மீட்கும்படியாக நமது கர்த்தர் மீட்கும் கிரையமாகக் கொடுத்ததென்ன?

வேத வாக்கியங்களே உத்தரவு கொடுக்கட்டும். கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார் என்றும், ஆக்கினைக்குட்பட்ட பாவிகளுக்காக ஜீவனைச் சம்பாதிக்கும்படி அவர் தம்முடைய ஜீவனை ஓர் மீட்கும் பொருளாகக் கொடுத்தாரென்றும், தமது சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மைக் கிரயத்துக்குக் கொண்டாரென்றும், இதற்காகவே தேவனுடைய குமாரன் மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்டாரென்றும், உலகம் ஜீவனை அடைவதற்காக தமது மாம்சத்தை அவர் கொடுத்தாரென்றும், மனுஷனால்(ஆதாமால்) மரணமுண் டானது போல, மனுஷனால் (மனுஷனாகிய கிறிஸ்து இயேசு வினால்) மரித்தோரின் உயிர்த்தெழுதலுண்டாகுமென்றும் வேதவாக்கியங்கள் திரும்பத் திரும்பப் பலமுறையும் தெளிவாக அறிவிக்கின்றன. 1 கொரி. 15 : 3; மத். 20 : 1; 1 தீமோ. 2 : 5, 6;ஓசி. 13 : 14; 1 கொரி. 6 : 20; 1 பேது. 1 : 18, 19; 1 யோவா. 3 : 8; யோவா. 6 : 51; 1 கொரி. 15 : 21.

''பாவத்தின் சம்பளம் மரணம்'' என்ற தெளிவான வேத போதனையை இனிமேலும் மறுக்கவும் சந்தேகிக்கவும் இடமுண்டா? பிற சமயக் கொள்கையாகிய நித்திய வேதனை யின் உபதேசம் வேதபுத்தகத்துக்கும் நியாயத்துக்கும் விரோதமானது என்பதைச் சந்தேகிக்க இனிமேலும் இடமுண்டா?

***

# பாவத்தின் சம்பளம் மரணமே

**பா**வத்தின் சம்பளம் மரணமென்றும், அது எவ்விதமான கருத்திலும் நித்திய வேதனை அல்லவென்றும் சுருக்கமாகக் காண்பித்து முடிப்போம்:-

### A. அதின் நிரூபணம்

1. தெளிவான வாக்கியங்கள்: ஆதி. 2 : 17; எரே. 31 : 30; ரோ. 1 : 32, 5 : 2, 15; 17 : 6 – 16, 21, 23; 7 : 5; 1 கொரி. 15 : 21, 22, 56; யாக். 1 : 15; 1 யோ. 5 : 16.
2. இணை வாக்கியங்கள் : ஆதி. 3 : 19; ரோ. 1 : 18; 5 : 16; 18, 19.

### B. அதின் தன்மை

1. ஜீவன் அல்ல: உபா. 30 : 15, 19; ரோ. 5 : 21; 6 : 28; 8 : 13; கலா. 6 : 8.
2. ஆனால் நிர்மூலம் (அடியோடு அழிந்து போகுதல்)
   a. இல்லாமற் போகுதல்: யோபு 6 : 15, 18; 7 : 9; சங். 37 : 10, 35, 36; 49 : 12; 104 : 35.
   b. அழிவு : யோபு 4 : 9; சங். 9 : 5; சங். 37 : 38; சங். 73 : 27; 145 : 20; நீதி.11 : 10; 1 கொரி. 3: 17; (கெடுப்பார் – அழிப்பார்); பிலி. 3 : 19, 2 தெச. 1 : 10; 1 தீமோ. 6 : 9, 2 பேது. 2 : 1, 12; 3 : 16 (கேடு – அழிவு)
   c. நிர்மூலமாகுதல்: யோபு 4 : 9; சங். 104 : 35; ஏசா. 1 : 28 .
   d. பட்சிக்கப்படுதல்; ஏசா. 1 : 20; எபி. 10 : 26-28; எபி. 12 : 29.
   e. மடிந்துபோகுதல்: மத். 8 : 25, 32; லூக். 13 : 33;

யோவா. 3 : 16 (கெட்டுப்போகாமல் - மடிந்து போகாமல் - அழிந்து போகாமல்); லூக். 11 : 50 (கொலையுண்ட - மடிந்துபோன)

f. அறுப்புண்டு போகுதல்: சங். 37 : 9, 22, 34, 38.

**C. அதன் விளைவு: ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் அழிவு.**

1. ஆத்துமா சாகிறது; யோபு. 36 : 14 அவர்களுடைய ஆத்துமா மாண்டுபோகிறது. (ஆங்கில வேதாகம மார்ஜின் பார்க்கவும்) : சங். 56 : 13; 78 : 50, 116 : 8; எசேக். 18 : 4, 20; யாக். 5 : 20.
2. மரித்துப்போன ஆத்துமா உயிரோடிருக்கிறதில்லை; சங். 22 : 29; 30 : 3; 33 : 18, 19; ஏசா. 55 : 3; எசேக். 13 : 19, 18 ; 27.
3. மரித்துப்போன ஆத்துமாத இல்லாமல் போகிறது: சங். 49 : 9.
4. பொல்லாத ஆத்துமா அழிக்கப்படுகிறது : சங். 35 : 17; சங். 40 : 14. (என் ஆத்துமாவை அழிக்க...); நீதி. 6 : 32; எசேக். 22 : 27; மத். 10 : 28; அப். 3 : 23 (ஆங்கில வேதாகமம் காண்க; யாக். 1 : 21)
5. பொல்லாத ஆத்துமா நாசமாக்கப்படுகிறது: ஏசா. 10 : 18 (Shall consume - both soul and body ஆங்கில வேதாகமம் காண்க.)
6. பொல்லாத ஆத்துமா பட்சிக்கப்படுகிறது: எசேக். 22 : 25
7. பொல்லாத ஆத்துமா மாய்ந்து போகிறது ; மத். 16 : 25, 26. (ஜீவன் என்ற பதம் கிரேக்க பாஷையின்படி ஆத்துமா என்றிருக்க வேண்டும்).
8. பொல்லாத ஆத்துமா அறுப்புண்டு போகிறது. லேவி. 22 : 3; எண். 15 : 30.

**D. அதின் இசைவு**

1. வேத புத்தகம் முழுவதும் அப்படியே கூறுகிறது.
2. பாவத்தின் சம்பளம் மரணம் என்பது அதைப்பற்றிய எல்லா வேதவாக்கியங்களுக்கும் இசைந்திருக்கிறது.
3. அது எல்லா வேத உபதேசங்களுக்கும் இசைந் திருக்கிறது.
4. இத்தண்டனை விதிக்கப்படக்கூடியதாகையால் அது தன்னில் தானே இசைவுள்ளதாயிருக்கிறது.
5. அது தேவ குணாதிசயத்திற்கு இசைந்திருக்கிறது.
6. அது கிறிஸ்துவின் மரணமாகிய அவரது ஈடு பலிக்கு இசைந்திருக்கிறது. (அதாவது மீட்கும் பொருளின் உபதேசத்துக்கு இசைந்திருக்கிறது.)
7. அது தெளிந்த மனதுக்கு (அறிவுக்கு) இசைந்திருக்கிறது.
8. அது அனுபவத்துக்கும் நாம் கவனிப்பதற்கும் இசைந் திருக்கிறது.
9. அது தேவ பக்திக்கு இசைவானது.
10. அது நியாயத்துக்கும் பகுத்தறிவுக்கும் இசைவானது.
11. அது பாவம் ஒழிந்து போய்விடுமென்ற உபதேசத்துக்கு இசைவானது.
12. அது பொல்லாப்பு ஒழிந்துபோகுமென்ற உபதேசத்துக்கு இசைவானது.
13. அது ஜீவன் ஓர் கிருபைவரம் என்ற உபதேசத்துக்கு இசைவானது.
14. பாவத்தின் சம்பளம் மரணமே என்பது இருண்ட யுகங்களுக்குமுன் தேவனுடைய ஜனங்களின் கோட்பாடாயிருந்தது.
15. பாவத்தின் சம்பளம் மரணம் என்பதே தேவனும் அவருடைய ஊழியக்காரரும் போதித்த போதனை.
16. அது மார்க்க சுயாதீனத்துக்கும் சுதந்திரத்துக்கும் இடம் கொடுக்கிறது.
17. அது நீதி ஸ்தலத்தின் சமத்துவத்துக்கும் நிரூபணம்.
18. மரணமே பாவத்திற்குரிய தண்டனையென கிறிஸ்து போதித்தார்.
19. அது ஆத்துமாவின் உண்மையான தன்மைக்கு அடிப்படை.
20. அது வேத புத்தகம் போதிக்கிற நரகத்துக்கு இசைந்தது.
21. அது நித்திய ஜீவனைப்பற்றிய உண்மையான அபிப்பிராயத்துக்கு அடிப்படையாகும்.
22. அது வருங்கால வாழ்வின் உண்மையான அபிப்பிராயத்துக்கு அடிப்படையாகும்.
23. அது உண்மையான வியாக்கியான முறைகளுக்கு அடிப்படையாகும்.
24. அது திருத்தமான மொழிபெயர்ப்புகளால் ஆதரிக்கப் படுகிறது.
25. அது தேவனால் நம் மனுக்குலத்துக்குப் போதிக்கப்பட்ட முதல் உபதேசம்.
26. அதை வேத புத்தகத்தின் உபதேசமென்று நம்புவது, அவிசுவாசிகளை, அதாவது தேவன் இல்லையென்று சொல்லுகிறவர்களை மனந்திரும்பப் பண்ணியிருக்கிறது.

***

**நாசரேத் கன்வென்ஷன் 2011 (அக்டோபர் 21, 22, 23)**

இந்த கன்வென்ஷனில் கலந்து கொண்டு தங்கள் பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொண்ட, இந்த ஊழியத்தில் பங்குபெற்ற மற்றும் உதவி செய்த சகோதர, சகோதரிகள் யாவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக. சங். 103 : 11; 147 : 11.




Laymen's Home Missionary Movement
32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629



FOR PRIVATE CIRCULATION ONLY